REGD. M. 4642

# திராவிடநாடு

விலை அணு 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 6—6—48 | இதழ் 51

# ★ "ராஜபார்ட்" ★

## ரங்கதுரை பாகவதர்

"அச்சாபீஸ் மானேஜரைப் போய்க்கேளடா, 'இப்படித்தான் போஸ்ட்டர் போடுவதா என்று. போஸ்டர் போடுகிறார்களாம் போஸ்டர். இது என்ன, வாடகை சீன் போட்டாடும், வக்கற்ற கம்பெனி என்று எண்ணிக்கொண்டாரா?' நான் தான், செலவுபற்றி யோசிக்கிற கம்பெனி அல்லஇது. போஸ்டர் பிரமாதமான முறையில் இருக்க வேண்டும் என்று பன்னிப்பன்னிச் சொன்னேனே. ராஜபார்ட் என்ற எழுத்தை, இப்படியா கடுகு சைசில் போடுவது? போ! இந்தப்போஸ்டர் வேண்டாம். பெரிய எழுத்தில், ராஜபார்ட் ரங்கதுரை பாகவதர் என்று போடச்சொல்லு. (சற்று யோசித்து) டே! ராஜபார்ட் என்று மட்டும் அல்லடா, ராஜபார்ட் ராகஆலாபன ரங்கதுரைபாகவதர், என்றுபோடச் சொல்லு" — என்று உற்சாகத்துடன், கூறி, கேட் கந்தசாமியை, டிராமா கம்பெனி முதலாளி குருமூர்த்தி, அனுப்பிவிட்டு, கம்பெனி மானேஜரைக் கூப்பிட்டனுப்பிவிட்டு முருகா! கந்தா! என்று கூறிய்வண்ணம் திண்டின்மீது சாய்ந்தார். அவர் சாய்ந்த அதிர்ச்சியால், பக்கத்திலிருந்த வெள்ளித்தாம்பாளம் ஆடி, அதிலேஇருந்த, வாசனைப் பாக்குத்தூள், ஜமக்காளத்தின்மீது, சிதறிற்று. வேலைக்காரன் வந்ததும், அதைச் சுத்தப்படுத்தச் சொல்லலாம் என்று எண்ணி, அவர் வேறு சில முக்கியமான யோசனையில் ஈடுபட்டார்.

கம்பெனிக்கு நல்லபேர்—புகழ்—வருவாய். பத்திரிகைகளில், பாராட்டுகள் — போட்டோக்கள். இந்த நிலைமை, வெறும் எழுத்துவடிவோடு இல்லை — வெள்ளித் தாம்பாளமாக, வெல்வெட்டுமெத்தையாக. இரும்புப் பெட்டியாக, உருவெடுத்துக் காட்டிற்று. நடிகர்கள்மட்டும் நூறுபேர்! எடுபிடிகள், எக்ஸ்ட்ராக்கள், முகவியவர்களைச் சேர்த்தால், ஒரு ஐம்பது தேறும். விருந்தாளிகள் ஒரு ஐம்பதுபேர் இருக்கும்—ஆகமொத்தம், பகல் ஒருமணிக்கு, சாப்பாட்டுக்கு, பந்தி உட்காருவதைப் பார்த்தால், குருமூர்த்திக்கு, பரமானந்தமாக இருக்கும். உள்ளூர் பெரிய மனிதர் யாராவது இரண்டுபேரை, அழைத்து வருவார், இதைப்பார்க்கட்டும் என்பதற்காகவே.

திண்டின்மீது சாய்ந்த குருமூர்த்தியின் மனக்கண்முன், நாலுநல்ல நடிகர்களே கிடையாது இருந்தகாலம், வசூலாகப்பணம், கொட்டகை வாடகைக்கும், பெட்ரோமாக்சுக்குமே, போதுமானதாக இல்லாத காலம்; இன்னும் அதற்கும் முன்பு, கம்பெனியே இல்லாமல, அவ்வப்போது ஊருக்கு ஊர், சிற்சிலரைப்பிடித்து, ஸ்பெஷல் கற்றுக்கொடுத்து, 'கூத்து' ஆடிவந்தகாலம், இவைகளெல்லாம் கவனத்திற்கு வந்தன. கூத்தாடி குருமூர்த்தி என்ற பெயர் மறைந்து, பாரதமாதா நாடகக்கம்பெனி முதலாளி குருமூர்த்தி என்ற பெயர், வருவதற்கு இடையில், அவர் பட்டகஷ்டங்கள் பலப்பல. அவைகளை எல்லாம், எண்ணினார்—அவருடைய முகத்திலே, வெற்றிக்களை தாண்டவமாடிற்று.

ஒருகட்டு 'ரவேல்' வெற்றிலையுடன், மானேஜர்வந்து சேர்ந்தார்.

"நேற்று வசூல் எவ்வளவு?"

"நேற்று, கொஞ்சம் மட்டம்.சிறுதூறல்."

"தொகை, என்னய்யா!"

"எழுநூற்று அறுபது!"

"இவ்வளவுதானா?"

இவ்வளவுதானா!—என்று அவர் கேட்டபோது, உள்ளூர அவருக்கே

சிரிப்பு! ஏனெனில், அவர் 'அறுபது' ரூபாவசூலையே, 'அதிர்ஷ்டம்' என்று எண்ணி வந்தநாட்கள் உண்டு!! கம்பெனி மானேஜரிடம், அவர் பேசி வந்த பல விஷயங்களிலே, முக்கியமானது, ரங்கதுரையின் போட்டோவைப் பற்றியது. மானேஜர் அவசரமாகச் சென்று, அழகான சட்டம் போடப்பட்டிருந்த, போட்டோவைக் கொண்டுவந்து, குருமூர்த்தியின் எதிரில்வைக்க, அவர், ரவிவர்மா தீட்டிய லட்சுமி படத்தின் பக்கத்திலே, துரையின் போட்டோவை மாட்டிவைக்கும்படி கூறினர். மானேஜர், லட்சுமி சரஸ்வதி படங்களுக்கு நடுவில், இதைத் தொங்கவிட்டார்—இந்த மூன்று படங்களுக்கு மேலே, கம்பெனி முதலாளி குருமூர்த்தியின் பெரிய படம் ஒன்று இருந்தது. குருமூர்த்தி படங்களை மாறிமாறிப் பார்த்து மகிழ்ச்சியடைந்து, மானேஜரைப் பார்த்து, "நம்ம துரையுடையமுகத்திலே இருக்கிறகளை, இருக்குபார்—அடடா, அற்புதமானது. அதுதான் 'லட்சுமிகளை'ன்னு சொல்வது" என்று பாராட்டினர். மானேஜர், அதைத் தொடர்ந்து துரையின் கண்ணொளி, குரலின் இனிமை, சங்கீதஞானம். நடிப்புத்திறமை, இவைகளைப்பற்றி ஊரார், உயர்வாகப்பாராட்டுவது, என்பவை பற்றிச் சரமாரியாகப் பேசிவிட்டு, "தப்பித்தவறி, ரங்கதுரை, மோடாரில் கடைவீதிப்பக்கம் போய்விட்டால் போதும், ஒரேகூட்டம்! அதோபார், ராஜபார்ட் ரங்கதுரை பாகவதர்—என்று கூவிக்கொண்டே கூட்டம் ஓடிவரும்!" என்று முத்தாய்ப்பு வைத்தார். "ஆமாம்! இப்போது நம்மதுரையின் பெயர் பிரபல்யமாகி இருக்கிறது. எப்படி ஆகாமல் போகும்? டபுள்ராயல் ஆறுஆயிரம், சிங்கிள்ராயல் ஒரு பத்து, ஆமாம் ராயல் ஒரு ஏழுஆயிரம், இப்படி அல்லவா, 'பப்ளிசிடி' ஏறி இருக்கு! ஊரிலே ஒருமூலை முடுக்குக்கூட பாக்கிகிடையாதே, போஸ்டர் எங்கேயும் ஒட்டியிருக்கிறோம். அவ்வளவு விளம்பரமும், ரங்கதுரைக்குத்தானே! ஊர்ஜனங்கள், ராஜபார்ட் ரங்கதுரை பாகவதர் என்று புகழ்கிறார்கள் என்றால், இதிலே, ஆச்சரியமென்ன?" என்று விளக்கத்தை விவரமாகக்கூறினர் குருமூர்த்தி. அவருக்கு, ரங்கதுரையிடம், கோபமோ, பொறுமையோ, இல்லை. ஆனால், மனம் என்னும் கழனியில், இந்த விதையைத் தூவினால், பலன் தரும் அளவுக்கு, பலர், ஏர் உழுது இருந்த நேரம் அது!

"ரங்கதுரையின் மனம் சுத்தமானது, அவனுடைய சாரீரத்தைப் போலவே!"

"அதனாலேதான், அவன் முன்னுக்கு வருகிறான்—நாமும், பணம் என்று பார்க்காமல், அவனுடைய பேரும்புகழும் வளரவேண்டும் என்று பாடுபடுகிறோம்."

"இட்டார்க்கு இட்ட பலன் தானுங்களே."

"அதுசரி, நல்லவர்களின்போக்கு அது. வேறு சிலதுகள் இல்லையா? உண்டவீட்டுக்கே இரண்டகம் செய்து கொண்டு!"

"ஆனால் நம்மரங்குவின், சுபாவம் அப்படிப்பட்டதல்ல. உங்களிடத்திலே அளவுகடந்த அன்பு. நேற்றுக்கூட, 'நாடகம்' பத்திரிகை ஆசிரியர் ரங்கதுரையிடம் உமது ஆசிரியர் யார், எத்தனைவருஷமாக இந்த நாடகத் தொழிலில் இருக்கிறீர், நீங்கள் முதன் முதலாக எந்த நாடகத்தில் நடித்தீர், என்றெல்லாம் கேட்டார், நம்மரங்குவின் பெருங்குணத்தைப் பாருங்கள், என் ஆசிரியர் கலாகேசரி குருமூர்த்தியார்—நான் நாடகத்தொழிலிலே ஈடுபட்டதே அவருடைய சகாயத்தாலேயும் ஆசிர்வாதத்தாலேயும், சிட்சையாலேயுந்தான், என்று கூறினன்."

"நல்லபிள்ளை, நம்மரங்கு! நல்ல மனம்—குணம். கலாகேசரின்னு நமக்கு டைடிலே கொடுத்து விட்டானு! நம்மிடம் அவனுக்கு உள்ளபடியே அவ்வளவு ஆசை. பாவம்! அவன் ஆசையை நாம் கெடுப்பானேன், இனி, போஸ்டர், பிட்நோடீஸ், விளம்பரங்களிலே, நம்ம பேர் போடும்போது, கலாகேசரி குருமூர்த்தி என்றே போடு. ரங்குவுக்குத் திருப்தியாக இருக்கும்"

இவ்விதமான உரையாடலுக்குப் பிறகு, குருமூர்த்தி, வளரும் வசூலின் காரணமாக முகம் மலர்ந்து, அந்த வசூலுக்கு முக்கியகாரணமாக இருந்துவந்த ரங்குவுக்கு, பாதாம் கலந்த பால்கொடு, பத்து ரூபாய் கைச்செலவுக்குக்கொடு, படுக்கையிலே இன்னும் இரண்டு தலையணை தைத்துப்போடு, ஆர்ட் அட்டையிலே அவன் போட்டோ ஒரு பத்தாயிரம் அச்சிட்டு, அட்டை இரண்டணு வீதம், தியேட்டரில் விற்பனைசெய்ய ஏற்பாடுசெய், ரங்குவின் புகழ் பரவட்டும் என்று களிவுடன் புதியபுதிய கட்டளைகள் பிறப்பித்துவிட்டுக் கண்அயர்ந்தார். கம்பெனியில் அப்போது 'கந்தலீலா' நாடகம் — பிரமாதமான வசூல்! ராஜபார்ட் ரங்கதுரை பாகவதர் தான் முருகன்! மற்றப் பாகங்கள் வேறுபல நடிகர்கள்!! அவர்களின், பெயர், வெளியேகூடத் தெரியாது. தெரிவிக்கும்வழக்கம், கிடையாது.

குருமூர்த்தியின் குதூகலத்தைவிட ஒருபடி அதிகமாகவே இருந்தது, ரங்குவின் களிப்பு. நாடகத்தொழிலிலே கிடைத்த நற்பெயர், செல்வாக்கு, ரங்குவின் இளம் உள்ளத்துக்குத் தேன் ஊற்றாக இருந்தது. குருமூர்த்தி, தன்னிடம் காட்டும் அன்பும் அக்கரையும், அவன் மனதை நெகிழச்செய்தது. மற்ற நடிகர்கள் கண்டு பொறாமைப்படும் அளவுக்கு, தனக்கு, அவர் சலுகைகள் காட்டுவது ரங்குவின் மனதிலே, அவர்மீது ஒருபாசமே ஏற்படும்படி செய்துவிட்டது. குருமூர்த்தி, ரங்குவைப் பாகவதராக்கி, ராஜப்பார்ட்டாக்கி, ராக ஆலாபன ரசிக்கி, மகிழ்ந்தார். குருமூர்த்தியை கலாகேசரியாக்கி, ரங்குமகிழ்ந்தான். ராஜபார்ட்டான ஆலாபன ரங்கபாகவதரின் நடிப்பு மிகமிக அருமையாக இருந்தது—அவர், சாரீரத்தின் இனிமையும் சங்கீத ஞானமும், எப்படி இருந்தது என்று பொருத்தமான உபமானம் கூறவேண்டுமானல், நவயுகக்கலாகேசரி குருமூர்த்தியார், கம்பெனியை நடத்தும் விசேஷத்திறமையும், திறமையுள்ள நடிகர்களைக்கண்டுபிடித்து அவர்களின்திறமைக்கேற்ற இடமளித்து, அவர்களை முன்னேற்றத்துக்குக் கொண்டுவரும் "பக்குவமான முறை" இருக்கிறதே, அதுபோன்று இருந்தது, என்றுதான் கூறவேண்டும்—என்று ரசிகர்கள், பேசினர், எழுதினர்; அதாவது இருவரிடமும் நட்பும், அதனால் சிறு சிறு பலனும் பெற்றவர்கள்! வேறு சிலர் — அவர்கள் தொகை குறைவு—இருந்தனர், குருமூர்த்தியிடம் பேசும்போது "ரங்கதுரையுடைய நல்லகாலம், அதிர்ஷ்டம், உங்களுடைய ஆதரவு கிடைத்தது. இப்போது அதனலே, ராஜபார்ட் ஆனன்—பாகவதர் ஆனன்—நீங்கள் அவனுக்கு இவ்வளவு அன்பு

# இஸ்லாமா? இஸ்ரேலா?

## பலஸ்தீன் பிரச்னை

## யூதரின் மனோராஜ்யம் உருவமாயிற்று!

## 'யாத்ரா மார்க்கத்தில்' இரத்தவெள்ளம்

———:(o):———

மன்னனென்றும், மாவீரனென்றும் கூறிக்கொண்டு, இங்கு மந்தகாசமாக வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்—அங்கு, உமது மதத்தவரின், மானம் பறி போகிறது! மாதா தெருக்கூட்டுகிறாள், மகன் தேர் மீதேறி வருகிறான்! செல்வம் இங்கே! அங்கே எல்லாச் செல்வத்திலும் மேலான செல்வமாகிய மார்க்கம் மூர்க்கர்களால், சூறையாடப்படுகிறது. இங்கே, தங்கக்கலசமுள்ள மாடமாளிகைகள்! அங்கே, நமது ஐயனின் சமாதி அயலாரிடம் சிக்கிச் சீரழிகிறது. இங்கு கூடுகிறீர்கள் பரமன் புகழ்பாட—பிரம்மாண்டமான தேவாலயங்களில்—அங்கு தெருத் தெருவாகத் துரத்தப்படுகிறார்கள், உங்கள் மார்க்கத்தவர்! சிலுவைக்கு ஆபத்து! சிலுவைக்குச் சீரழிவு! பிறைக் கொடியோர், சிலுவையை இகழ்கிறார்கள் — சிலுவையில் உயிர் நீத்த உத்தமனை உன்மத்தன் என்று உளறுகிறார்கள்—தேவகுமாரன் தீட்டிய திருப்பாதையை செல்வோரை, தீயர் என்றும், பேயர் என்றும் தூற்றுகிறார்கள் — துரத்தியடிக்கிறார்கள் — இங்கு நீங்கள் துரைமார் என்று துந்துபி முழக்கமிட்டுக்கொண்டு வாழ்கிறீர்! அந்தத் துர்ப்பாக்கியர்களுக்குத் துணைபுரியும் தூய உள்ளம் படைத்த வீரர்கள் இங்கு இல்லையா? மார்க்கத்துக்காக உயிரை அர்ப்பணிக்கும் உத்தமர், இங்கு இல்லையா? சிலுவைக்காக உயிரைவிடத் துணியும் செம்மல் எவருமே இல்லையா? இங்கு உள்ளவர்களுக்கெல்லாம், ஊராள, உண்டு கொழுக்க, உல்லாசத்தில் புரளமட்டுந்தான் தெரியுமா? உண்மைக்கு உழைக்கத் தெரியாதா! கொடுமைக்காளாக்கப்பட்டு, அங்கு ஏசுமார்க்கத்தவர், ஏங்குகிறார்கள்—தூங்காதீர்—துடித்தெழுவீர்! ஐயனின், புதைக்குழி, புனிதஸ்தலம்—அது, வேற்று மார்க்கவேந்தரின், விளையாட்டு மைதானம் ஆகிவிடுகிறது — விழித்தெழுவீர். வீரரே! வீறுகொண்டெழுவீர்! புனிதபுரி, ஜெருசலம்! அதைப் புல்லர் வசமிருந்து மீட்பீர்! மார்க்கத்திற்கோர் மாணிக்கம், ஜெருசலம்—அதை மாற்றாரிடமிருந்து, திருப்பிப் பெற்றாகவேண்டும்—மானிலம், நம்மை இகழாதிருக்க வேண்டுமானால்—மானத்தின் மீது நமக்குப்பற்று இருக்குமானால், நாம் பலியாடுகளல்ல, மனிதர்களென்பதை நிரூபிக்க வேண்டுமானால்!

உடன்பிறந்தோரே! ஒருமார்க்கத்தவரே! உள்ளம் நொந்து இதை உரைக்கிறேன்—அங்கு நம்மவர் படும் அல்லலைக்கண்ட யாரும், நாணி, நடுங்கிச், சாகாதிருக்க முடியாது. கூப்பிட்டுவா, உன் கும்பலை! —என்று அங்கு மாற்றார் கொக்கரிக்கின்றனர்! சிலுவை சிலாக்கியமானது என்று செப்புகிறீர்—பித்தரே! உன்மார்க்கத்தவருக்கு, சிலுவையைவிட அவர்களின் உல்லாச வாழ்வு சிலாக்கியமானதாகத் தெரிகிறது, ஆகவேதான் அவர்களின் சிறுவிரலும் அசையக்காணோம் என்று கேலி பேசுகிறார்கள், கொடியவர்கள். ஆற்றலற்ற பாமிசப் பிண்டங்களல்ல! உயிருக்குப்பயந்து ஓடி ஒளியும் கோழைகளல்ல! உல்லாச வாழ்வுக்காக வேண்டி, ஆண்மையை இழந்துவிடத் துணியும் உலுத்தர் அல்ல! போரிடத் தெரியாத பேடிகளல்ல!—என்றெல்லாம், நான் கூறினேன்—உங்களைப்பற்றி—அவர்களிடம். அவர்கள் சிரித்தனர், கைகொட்டி! கூப்பிட்டுக்கொண்டுவா, அந்தக்கூட்டத்தை, என்று கொக்கரித்தனர். சிலுவையைக் காக்கச் சீறி வருவர், சிங்கங்கள் போல், என்றேன்—சிரித்தனர்! வாள் உண்டு, வல்லமை உள்ள தோள் உண்டு, எம்மவருக்கு என்றேன்—அவர்கள் தமது தாளைக் காட்டினர்! தலைபிறக்கமான பேச்சு! தாங்க முடியாத கொடுமை! தத்தளிக்கும் நிலை! சிலுவையை, நீங்களே ஒடித்து வீசி எறியுங்கள்! மாற்றார் இகழும் போது, அவர்களின் கொட்டத்தை அடக்க முடியாத கோழைகளிடம் சிலுவை ஏன்? அவர் சிந்தினார் இரத்தம், உங்களுக்காக! அவருக்காக இரத்தம் சிந்தத்தயங்குகிறீர்!! அவருடைய, மார்க்கத்தவர் என்றும் மார்தட்டிக் கொள்கிறீர்! எங்கே உங்கள் வீரம்! எங்கே வாள். எங்கே உங்கள் மான ரோஷ உணர்ச்சி! உங்கள் மார்க்கம் மாற்றாரிடம் சிக்கிச் சீரழிகிறது — மாதாவின் மானம் பறிபோகிறது—மைந்தர்களே! கிளம்புங்கள்! செங்கோல் தாங்கும் கை, ஏரடிக்கும் கரம், துலாக்கோல் ஏந்திய கை, செல்வத்தைத் தீண்டித் தீண்டி மகிழும் கரம், காதலியின் கன்னத்திலே விளையாடும் கரம், அணைக்கும் கை—எல்லாம், வாள் ஏந்தவேண்டும்—இவை எல்லாம் நீங்க வேண்டுமானால், இவற்றினுக்கெல்லாம் மேலான, மானம், பங்கப்படாதிருக்க வேண்டுமானால்! மாவீரர் அல்ல, நான் கேட்பது—மனிதர்களை அழைக்கிறேன்! முடி தரித்தவனானாலும், மனிதனே! மூலையில வேலை செய்துகிடக்கும் வறியனாயினும் மனிதனே! நான் மனிதர்களைக் கேட்கிறேன்!

* * *

பதினோராம் நூற்றாண்டின் இறுதியில், ஐரோப்பா கண்டத்திலே, மன்னர் அவையிலும் மாதாகோயிலிலும், மக்கள் மன்றத்திலும், பெருந்தவப் பாதிரிமார்கள் சிலுவைக்கு ஆபத்து! மார்க்கத்துக்கு ஆபத்து!—என்று, ஆவேசமூட்டக்கூடிய விதமாகப்பேசப்பேச, மக்கள் மனதிலே

கொதிப்பேற்றினர். மக்களின், உணர்ச்சிவேகம், அவர்கள் ஆற்றிய உரைகளால், புயலெனக்கிளம்பிற்று. ஊருக்குஊர் பரவிற்று, சிலுவைக்கு ஆபத்து என்ற கோஷம்! வீடெல்லாம், இதே பேச்சு! பலநாடுகளிலும் இதே பிரச்னை! படைவீரர்களை மட்டுமல்ல, படுகிழவர்முதல், அடுப்படி இருந்து வந்த ஆரணங்குகளும், உணர்ச்சி வேகத்தால் தாக்கப்பட்டனர். ஐரோப்பாஎங்கும், சிலுவைக்கு ஆபத்து—சிலுவைக்கு ஆபத்து—என்ற 'சேதி'—காட்டுத் தீயெனப் பரவிற்று.

ஜெருசலம், பலஸ்தீனில் உள்ள புனிதபுரி—கிருத்தவ மார்க்கத்தவர், அங்குதான், ஏசுவின் புதைகுழி இருப்பதால், அவ்விதம் கருதுகின்றனர்—மார்க்கப்பற்றுடையார், வாழ்விலே ஓர்காலேனும், ஜெருசலம் சென்று ஏசுவின் கடைசி நாட்களின் சின்னங்களைக் காண்பதைப் 'புண்ய காரியம்' என்று கருதுகின்றனர். சிலுவையில் அறைபடு முன்பு, ஏசு அளித்த, கடைசி விருந்து நடைபெற்ற இடம், அவர் உலவிய இடம், புதையுண்ட இடம், பிழைத்தெழுந்த இடம், ஜெருசலத்தில் உண்டு, எனவே, ஜெருசலம், எங்கள் மார்க்கத்துக்கு ஒரு மகத்தான இடம், என்று கிருஸ்தவர், கூறுவர். அங்கு திரளாகச் செல்வர்.

கிருஸ்தவரின் புனிதபுரியாக, ஜெருசலம் கருதப்படுவதுபோலவே, யூதர்கள், அதனைத் தமது திருஇடமாகக்கருதினர். ஏசுவுக்கு முன்பிருந்தே, யூதர்களுக்கு ஜெருசலத்திலே, திருக்கோயில்கள் உண்டு; யூதர்களின் வாழ்வு ஜொலித்திருந்த நாட்களிலே.

ஜெருசலம், கிருஸ்தவருக்கும், யூதருக்கும் புனிதபுரியாக, பலப்பல நூற்றாண்டுகளாக இருந்து வந்த போதிலும், அந்த நகரம் பலமுறை பலவகையான படைஎடுப்புகளுக்கு ஆளாகிப் பாழ்பட்டிருக்கிறது. யூதர்கள், ஜெருசலத்தில், தனி ராஜ்யம் நிறுவி ஆள்வதும், பிறகு அவர்களுக்குள்ளாகக் கட்சிகள் பிரிந்து, கலகம் விளைந்து, அரசு இரண்டாவதும், அவை ஒன்றுக்கொன்று போரிட்டுக் கொள்வதுமாக இருந்தனர். சாலமன் என்ற மன்னன் காலத்திலே யூதராஜ்யம், பெரும் புகழ் பெற்று விளங்கிற்று.

பலஸ்தீனப் பகுதியிலே, யூதராஜ்யம் அமைத்திடும், பெரும்பணியை, முதன் முதலில் மேற்கொண்டவர் யூதர்களின் மார்க்க போதகர் என்றும் தீர்க்கதரிசி எனவும் கீர்த்தி பெற்ற, மோசஸ்." அவருடைய, ஆணைப்படி, பல இலட்சம் மக்கள், பலப்பல நாடுகளையும், வெளிகளையும் காடுமலைகளையும் கடந்து சென்றனர் புதிய அரசுகாண. ஆனால் பலஸ்தீன் போகுமுன்பு, அவரை இழந்தனர். மோசசின் உடன் பிறந்தவர், பிறகு, யூதராஜ்யத்தை அமைத்தார். அமைத்த அரசுதான், மேலே குறிப்பிட்டபடி, அடிக்கடி சிதைவதும் பிறகு ஜொலிப்பதுமாக, இருந்து வந்தது.

பலஸ்தீன், பல அரசுகளின் கையிலே சிக்கிச்சிதைந்த வரலாறு ஏராளமாக உண்டு.

ரோம் நாட்டவர், பலஸ்தீனத்தைப்பிடித்து ஜெருசலம் நகரையே இடித்துத் தரைமட்டமாக்கினர் ஒரு சமயத்தில். ஜெருசலம் என்ற பெயரையே நீக்கிவிட்டனர் — எலியா காபிடோலினு என்று புதுப் பெயரிட்டு—அந்த நகருக்குள் யூதர் பிரவேசிக்கக்கூடாது — மீறி நுழைந்தால், அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படும் என்று உத்தரவிட்டனர். இதுபோல் பன்முறை, யூதர்களுக்குப் பேராபத்து வந்ததுண்டு. ஆனால், மீண்டும் மீண்டும் அவர்களுக்கு ஏதேனும் ஒருகாரணத்தால் பழையநிலையையும் வருவதுண்டு.

ரோம்நாட்டவரால், இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட ஜெருசலத்தில், ரோம்நாட்டு ராணியாரே, பிறகு அழகான ஓர் கோயில்அமைத்தார்—புனிதபுரியாக்கினார். ஏசு தோன்றி மறைந்தார். அவர் நடமாடிய நகர், புனிதபுரி என்றாயிற்று—ரோம் ராணி கிருஸ்தவ மார்க்கத்தை மேற்கொண்டதால், எந்த ரோமிலிருந்து படைகள் கிளம்பி வந்து ஜெருசலத்தை இடித்துத்தள்ளிற்றோ, அதே ரோம்நாட்டிலிருந்து சிற்பிகள் வந்தனர்—கோயில்கட்ட—ஜெருசலம் நகரைப் புதுப்பித்து, அழகுபடுத்த.

ஜெருசலம், பல ஆண்டுகள், எகிப்து அரசிடம் இருந்திருக்கிறது.

பெர்ஷியா ராஜ்யத்தில் ஒருபகுதியாகப் பலகாலம், பலஸ்தீன் இருந்திருக்கிறது.

வரலாற்றிலே, பார்த்தால், பலஸ்தீன், பலமுறை நைந்திருக்கிறது, பலமுறை ஜொலித்திருக்கிறது, படுகளமாகப் பலமுறை இருந்திருக்கிறது.

ஏசு, இரத்தம் சிந்தினார், ஜெருசலத்தில! — மக்களின் இரத்தம், அதற்கு முன்பும் இன்றுங்கூடப் பலஸ்தீனில், கொட்டப்பட்ட வண்ணம் இருக்கிறது. இரத்த அபிஷேகம் பெற்றுக்கொண்டு வரும், இந்த ஜெருசலம், அதை அடுத்துள்ள அரசுகளைமட்டுமல்ல, ஐரோப்பா முழுவதையுமே ஆட்டிப்படைத்திருக்கிறது.

புனிதப்போர்! சிலுவை யுத்தம்! என்று கூறப்படும், போர், ஐரோப்பியநாடுகளுக்கு பெரும் பாரமாக இருந்தது,

ஏசுவின் நாட்களுக்குப் பிறகு, ஜெருசலம் கிருஸ்துவ மார்க்கத்தவருக்குப் புனிதபுரியாகிவிட்டது. ஐரோப்பாவிலே கிருஸ்தவமார்க்கம் பரவிவிட்டது. எனவே, ஜெருசலத்தின்மீது ஐரோப்பாவுக்கு ஒரு பற்றும் பாசமும், இயற்கையாகவே ஏற்பட்டது. ஜெருசலத்தைக் காப்பாற்றுவது என்றால், தங்கள் மார்க்கத்தைக் காப்பாற்றுவது என்று பொருள் கொண்டனர். எனவேதான் மூன்று நூற்றாண்டுகள், புனிதப்போர் நடத்தினர்கிருஸ்தவர்கள்.

ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், ஹங்கேரி—பல வல்லரசுகள், இந்தப் புனிதப்போரிலே பங்கு எடுத்துக்கொண்டன. எட்டுமுறை, புனிதப் போர்! படைஎடுப்புகள்! ஐரோப்பாவிலிருந்து பலஸ்தீனுக்கு!!

பலஸ்தீனில், பிறைக்கொடி! பலஸ்தீனில, ஜெருசலம்!! ஜெருசலத்தில் ஏசுவின் புதைக்குழி! இந்த நிலைமை, போரை மூட்டிவிடப் போதுமானதாக இருந்தது. இதனுடன், ஜெருசலத்திற்குப்புண்யகாரியமாகச்செல்லும் கிருஸ்தவர், கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்ற செய்தி கலந்துகொண்டது — கடும் புயல் கிளம்பிற்று, கிருஸ்தவரின் உள்ளங்களில்! சிலுவைக்கு ஆபத்து! என்ற முழக்கம் கோழைகளையும் வீரராக்கும் அளவுக்கு, ஐரோப்பாவில் பரவிற்று—உணர்ச்சி ஊட்டிற்று. அப்போது பலஸ்தீன், எகிப்து நாட்டரசிலே ஒருபகுதி!

பலஸ்தீனை விடுவிக்கவேண்டும்—ஜெருசலத்தைப் பாதுகாக்க வேண்டும்-புனிதபுரி பிறைக்கொடியினரின் ஆதிக்கத்தில் இருக்கக்கூடாது.

இது போர்முழக்கம். மதத்துக்கு ஆபத்து, என்ற முழக்கம், மன்னர்களையும் மக்களையும் ஏககாலத்தில், தட்டி எழுப்பிற்று. ஒவ்வொருவரும் தமதுசொந்தக்காரியம் என்று கருதித்துடித்து எழுந்தனர்.

1093-ம் ஆண்டு, பீடர் எனும் கிருஸ்தவத்துறவி, ஜெருசலம் சென்றுவந்தார். புனித புரியிலே, கிருஸ்தவமக்கள் சொல்லொணாக் கொடுமைக்காளாகி வதைகிறார்கள் என்பதை, அவர் ஐரோப்பாவில் பல்வேறு இடங்களிலே, எடுத்துரைத்து, ஆண்மையாளர்கள் இந்த அக்ரமத்தை ஒழித்தாகவேண்டும்—சிலுவையின் மாண்பு பாதுகாக்கப்படவேண்டும், என்று கூறினார். அவரும் அவர் போன்றாரும், ஆவேசமூட்டக்கூடிய விதத்திலே, பேசினதன் விளைவாக, ஐரோப்பா கண்டமே போர்க்கோலம் பூண்டெழுந்தது.

முதல் புனிதப் போர், 1096ல் துவங்கிற்று. பல்லாயிரக் கணக்கான கிருஸ்தவர்கள், கிளம்பினர்—பயிற்சி—படைக்குரிய இலட்சணம்—இவைகளுமின்றிக் கிளம்பி, பாதி வழி போவதற்குள், இந்தப் பெருங்கூட்டம், பாழ்பட்டது. பிறகு, காட்ப்ரி என்பவரின் தலைமையில், கட்டுப்பாடான முறையில் 80 ஆயிரம் பேர் கிளம்பினர். பல நாடுகளைக் கடந்து, பல போர்களை நடத்தி வென்று, இந்தப் பெரும்படை, மூன்றாண்டுகளுக்குப் பிறகு, ஜெருசலத்தின் எல்லைக்கு வந்து சேர்ந்தது. கிளம்பும்போது 80 ஆயிரம் பேர்! ஜெருசலத்தின் எல்லையை அடைந்தபோது, எண்ணிக்கை, இருபதினாயிரம்! அறுபதினாயிரம் பேர், உயிரைக் கொடுத்தனர், புனிதபுரியின் எல்லையைக் காணு முன்பே.

1099-ம் ஆண்டு ஜூன் மாதம், ஜெருசலத்தை முற்றுகையிட்டனர்—அதை ஜூலை 15-ந் தேதி பிடித்தனர்.

கிருஸ்தவ உலகம் களித்தது; மாதா கோயில்களிலே மணிஓசை கிளம்பிற்று; மகிழ்ச்சி பூத்தது. காட்ப்ரி, ஜெருசலத்தின் மன்னனாக்கப்பட்டான். அடுத்த ஆண்டு அவன் இறந்தான்.

ஜெருசலத்தின் கதி மீண்டும் இருள் கொடுக்கலாயிற்று. எகிப்தின் பிடியில் மீண்டும் ஜெருசலம் சிக்கிற்று. இரண்டாம் புனிதப் போர், தேவையாகிவிட்டது.

ஜெர்மன் சக்ரவர்த்தியும், பிரன்சுப் பேரரசரும் படை திரட்டினர்—பயன் காணவில்லை—1149ல், அவர்கள், வெற்றி காணாமலேயே, வீடு திரும்பினர். மூன்றாம் புனிதப் போர் மூண்டது.

இதேபோது, எகிப்து நாட்டுக்கு ஒரு இணையற்ற வீரன் மன்னனானான். மாற்றார் கண்டு அஞ்சக் கூடியவனாக மட்டுமல்ல, மதிக்கக் கூடியவனாகவும், மாவீரனாக மட்டுமல்ல, மதிவாணனாகவும், இருந்தான். சாலாவுடீன் எனும், அந்த மன்னனுடைய ஆற்றலைச் சமாளிக்க வேண்டிய பெரும் பொறுப்பை, ஜெர்மனி, பிரான்சு, பிரிட்டன், ஆகிய மூன்று நாட்டுப் பேரரசர்கள் மேற்கொண்டனர். ஏராளமான படை பலம்! வீரர் கூட்டம்! சாலாவுடீனைத் தோற்கடிக்கும் பேறு, பிரிட்டிஷ் மன்னன் ரிச்சார்டுக்குக் கிடைத்தது. சாலாவுடீன் தோற்றான்—ஆனால் போர் நின்றுவிடவில்லை; ஜெருசலமும் மீட்கப்படவில்லை. அதற்காகக் கடும்போர் நடந்தது; ரிச்சார்டு பன்முறை முயன்றும், ஜெருசலம் பிடிபடவில்லை. பிறகு, ரிச்சார்டு, சமாதானப் பேச்சைத் துவக்கினான். 1192ம் ஆண்டு செப்டம்பர் இரண்டாந் தேதி, சமாதானம் ஏற்பட்டது—தற்காலீக உடன்பாடு—மூன்று வருஷம் மூன்று மாதத்துக்கு மட்டுமே அமுலிலிருக்கும் விதமான சமாதானம்! இதன்படி, கிருஸ்தவர்கள், ஜெருசலத்துக்கு யாத்திரை வரலாம் என்று சாலாவுடீன், அவர்களுக்கு உரிமை அளித்தான்.

நான்காம் முறையாகப் புனிதப் போர் 1202ல் ஆரம்பமாயிற்று—வெனீஸ் நகரில் கூடினர், போர்க்கோலத்துடன்—படை கிளம்பிற்று. கான்ஸ்டான்ட்டி நோபில் நகரைத் தாக்கித் தகர்த்து, அந்தப் பகுதியிலே, சில இடங்களைப் பிடித்தது மட்டுமே, கண்ட பலன். ஜெருசலம் பிறைக் கொடியாரிடமே இருந்தது.

1217ல் நடைபெற்ற ஐந்தாம் புனிதப் போருக்குத் தளபதியாக ஒரு ஹங்கேரிய வீரன் கிளம்பினான்—நைல் நதி தீரத்தில் சில இடங்களைப் பிடித்ததோடு அவன் ஆற்றல் முடிந்தது. ஜெருசலம் விடுவிக்கப்படவில்லை.

ஆறாம் புனிதப்போரை முன்னின்று நடத்தினார், ஜெர்மன் சக்ரவர்த்தி. அவர் போர் புரியாமலேயே சமாதானம் பேசி, பத்தாண்டுகளுக்கு ஒரு உடன்படிக்கை ஏற்படுத்திவிட்டு, வீடு திரும்பினார்—

பிரமாதமான ஏற்பாட்டுடன் கிளம்பினான் ஒன்பதாம் லூயி மன்னன், ஏழாம் புனிதப்போர் நடத்த இந்த பிரன்சுப்பேரரசன், எகிப்து நாட்டிலே இஸ்லாமியரின் ஆதிக்கம் இனி என்றென்றும் இருக்கமுடியாதபடி செய்துவிடுகிறேன் என்று சூளுரைத்துச் சென்றான். போரிலே தோல்வியே கண்டான். அதற்கு முன்பு நடைபெற்ற புனிதப் போரிலே, பெற்ற, இடங்களையும் இழந்துவிட்டுத் திரும்பிவந்து சேர்ந்தான், 1254ல்.

எட்டாம் முறையும், லூயியே சென்றான்—பலன் இல்லை. புனிதப் போர்கள், இதுபோல, எட்டுமுறை நடைபெற்றும், ஜெருசலம் கிட்டவில்லை. பிறகு பத்தொன்பதாண்டுகள், சிறு சிறு பிரிவினர், ஏதேதோ வகையான முயற்சிகள் செய்துபார்த்தனர், ஜெருசலம் கிடைக்கவில்லை. 1291ல், (ஈஜிப்ட்) எகிப்து சுல்தான், கிருஸ்தவரிடம் இருந்த ஏகர் எனும் கடைசி இடத்தையும் கைப்பற்றிவிடவே, :பலஸ்தீன் பகுதியில், கிருஸ்தவ அரசு அமைக்கும், முயற்சி அடியோடு குலைந்தது.

1917ல் நடைபெற்ற ஜெர்மன் சண்டையின்போது, ஜெருசலம், பிரிட்டிஷாரால் பிடிக்கப்பட்டது. அது முதல், மே மாதம் 15-ந் தேதி வரையில் பலஸ்தீன், பிரிட்டிஷ் மேற்பார்வைக்குரிய ஆட்சியின்கீழ் இருந்து வந்தது. அந்த ஆட்சிக்காகக் குறித்திருந்த காலம் முடிந்து, பிரிட்டிஷார் வெளியேறியதும், புனிதப் போர்களின்போது இருந்த முழக்கம்போல், சிலுவையா, பிறையா, என்பதல்ல, இஸ்ரேலா,? இஸ்லாமா? என்பது போர்முழக்கமாகிவிட்டது.

புனிதப் போர்களுக்குப் பிறகு, ஐரோப்பியநாட்டுக், கிருஸ்தவர்கள், ஜெருசலத்தின்மீது கொண்டிருந்த நாட்டத்தை விட்டுவிட்டனர்; ஆனால், யூதர்கள், தங்கள் மனதிலிருந்து ஜெருசலத்தை அகற்றிவிடவில்லை! அவர்கள், உலகிலே, எங்கே சுற்றிக்கொண்டிருந்தாலும்,

(11-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 6—6—48 ஞாயிறு


## "இப்போது வேண்டாம்!"

✲

ஆஸ்ரமத்திலிருந்து அரண்மனைக்குக் குடி ஏறும் அளவுக்கு அரசியலில் அந்தஸ்தைப் பெற்றுள்ள அன்பர் ஆச்சாரியார், சின்னாட்களுக்கு முன்பு, வங்கத்திலே ஓரிடத்தில், வசிஷ்டர் வியாசர் போன்றோரின் வழிவழி தோன்றியவர் இவர் என்று பிறர் எண்ணும் நிலையை உண்டாக்கும் உபதேசம் ஒன்று செய்துள்ளார். "ஒருவருக்கொருவர் வைராக்யம், குரோதம், கிலேசம், கலகம்! சாந்தம் வேண்டும்—சீலம் வேண்டும்—சன்மார்க்கம் வேண்டும்—சமரச நோக்கம் வேண்டும் என்றெல்லாம் பேசினர். மாகாண உணர்ச்சி தலை தூக்குவது கண்டு, அவர் மருட்சி அடைந்து, எங்கே இந்த உணர்ச்சி, மாச்சரியத்தைக் கிளப்பிவிடுகிறதோ என்று அச்சமுற்று, மாகாணங்கள் தனித்தனி வட்டாரங்கள் தான், மொழி, கலை, நாகரிகம், இங்கு தனித்தனியான விசேஷங்களுடனேயே உள்ளன, அவைகளைக் காப்பாற்றுவதில் அக்கரை காட்ட வேண்டியதுதான் — உரிமைகளைக் காப்பாற்றவும் முயலத்தான் வேண்டும்—ஆனால், மாகாணங்கள் தனியாகவே இயங்க வேண்டுமென்று விரும்புவதும், ஒருமாகாணம் மற்ற மாகாணத்தைக்கண்டு மனமாச்சரியமடைவதும் கூடாது. இப்போது மாகாணங்கள் என்று பிரிவு இருக்கிறதே தவிர, சகல காரியமும், டில்லியில்தான் நடைபெறுகிறது. அரிசி இல்லையா? டில்லிக்குத் தந்தி! துணி வேண்டுமா? டில்லிக்குத் தந்தி! இரும்பு வேண்டுமா? டில்லிக்குத் தந்தி!—என்று இப்படித்தான் காரியம் நடக்கிறது. இந்நிலையை உணர வேண்டும்." என்று பொருள்படப் பேசினர்.

பேசிவிட்டு, சூட்சமமான ஓர் வார்த்தையும் சொன்னர்—மற்றவர்கள் வார்த்தைகளை வீசுவதற்கும் ஆச்சாரியார் வீசுவதற்கும் வித்யாசம் உண்டு—மாகாணங்கள் தங்கள் உரிமைகளைப் பெறவும், நலன்களைக் கவனித்துக் கொள்ளவும், இப்போது ஒன்றும் செய்யக்கூடாது—என்று கூறினர். மாகாணங்கள், தனி உரிமை கோரவே கூடாது, என்று கூறவில்லை. மாகாணங்கள் தமது உரிமைக்கான விஷயத்தை இப்போது கவனிக்கவேண்டாம்—என்று பேசியிருக்கிறார்.

இப்போது என்பது, அசையல்ல! அர்த்தமுள்ள வார்த்தை. பேசுவது ஆச்சாரியார்—திதிமந்திரி சண்முகனாரின் கருத்தின்படி, ஆச்சாரியார் ஓர் குல்லூகப்பட்டர்! எனவே, இப்போது என்பதிலே, விசேஷமான அர்த்தம்மட்டுமல்ல, பல அர்த்தங்கள், பொதிந்து இருக்கத்தான் வேண்டும்.

விடுதலைபெற்று புதிநாட்களாகி விடவில்லை, ஆகவே இப்போது வேண்டாம்—என்று ஒரு பொருள் இருக்கலாம். உலகச் சூழ்நிலை உருட்டி மிரட்டுவதாக இருக்கிறது, ஆகவே இப்போது வேண்டாம், என்று மற்றோர் பொருள் இருக்கலாம். காஷ்மீர் சண்டை, பாகிஸ்தானால் பயம், நிஜாமினால் தொல்லை, என்று பல உள்ளன, ஆகவே இப்போது வேண்டாம், என்றும் ஓர் பொருள் இருக்கலாம்.

ஆனால் இவ்வளவு வெளிப்படையாக, சாமான்யர்களுக்கும் எளிதில் விளங்கிவிடக்கூடிய, பொருள் கொண்டதாக மட்டும் இராது, ஆச்சாரியார் உபயோகித்த அந்த இப்போது! உட்பொருள், இருந்தே தீரும்.

இப்போது, அவர், அரசியல் கட்சித் தலைவரல்ல! ஆட்சிக் கூடத்தின் அலங்காரப் பொம்மை! இனி 'இந்தியாவின்' வைசிராய் ஆகப்போகிறார். இந்நிலையில் அவர், கட்சிப் பிரதி கட்சி பேசுவதோ, திட்டங்களைத் தீட்டி ஆதரவு தேடுவதோ, கூடாது—அவருடைய இடத்துக்கு, ஏற்றகாரியம் என்று கருதமுடியாது.

ஒரு காலமிருந்தது - நினைவிற்கு எட்டாதகாலமல்ல - காமராஜரின் கணைகளைத் தாங்க ஆச்சாரியார், "கிராமணியாரை"க் கேடயமாக்கி, கல்கியை முரசாக்கி, தமிழகத்தில் தன் கட்சியை எடுத்துரைத்து வந்த காலம்! இப்போது! அவர், வைசிராய்! காமராஜரோ, வல்லத்தரசுகட்சியினுல் வம்பு நேரிடாதபடி பார்த்துக் கொள்ளும் பணியில் ஈடுபட வேண்டியவராகி விட்டார்! இப்போது ஆச்சாரியாரின் கண்களுக்கு மாகாணங்கள் தெரியக் காரணமில்லை—எல்லைக்கோடுகள்— இயல்புகள்—எதுவும் தெரியாது. இப்போது அவருக்கு அவருடைய 'ஆட்சியின் கீழ்' வரும் இந்தியாவின் உருவம் மட்டும்தான் தெரியும். எனவேதான் போலும், இப்போது வேண்டாம் என்று கூறுகிறார்.

330 ஏக்கர் அளவுள்ள இடம்! இதிலே 12-ஏக்கர் தோட்டம்! 340-அறைகள்! 227-பிரமாண்டமான தூண்கள்! 37, நீர் ஊற்றுகள்! 14, மின்சாரலிப்டுகள்! 135 காலரிகள்!!

இப்படி இருக்கிறதாம், டில்லியில் உள்ள வைசிராய்மாளிகை! இதன் செலவு, ஒன்றேகால்கோடி ரூபாயாம்! இங்கு போகஇருக்கிறார், விரைவில்! இப்போது மாகாணத்துக்கு மாகாணம், தகரார் கிளம்பினால், அவருக்கு மனம் நிம்மதியாக இருக்கமுடியுமா? அந்தத் தோட்டத்திலே உலவி, நீர் ஊற்றுக்களைக் கண்டுகளித்து, அறைகளிலே சென்று இளைப்பாறி, பிரம்மாண்டமான தூண்களுக்குப் பக்கத்திலே நின்று, பார்த்து, ரசித்து, அலுத்த பிறகு வேண்டுமானல், மாகாணப் பிரச்னைகளைக் கவனிக்கலாம் — இப்போது—சே—இப்போது, அந்த இடத்தின் இலட்சணத்தைக் கண்டு களிக்கவேண்டியதல்லவா, அவசியம். ஆச்சாரியாரின் 'இப்போது' இதுவாக இருக்குமோ!—

அவர் வேதாந்தி என்கிறார்கள்—எனவே அவர், இந்த 'ரசத்துக்காக'ப் பேசினர், என்பதைக்கூட நிறுத்திக்கொள்வோம். வேறுஎன்ன பொருள்? இப்போது! எதைக் குறிக்கிறார் இந்தப்பதத்தால்!!

எப்படியோ இன்று, இந்திய பூபாகத்திலும் உலக அரங்கிலும் ஜவஹர் படேல் போன்ற வடநாட்டுத்தலைவர்களின் செல்வாக்கு மேலோங்கி இருக்கிறது. மக்கள்

**இந்தி, தமிழகத்தில் இஷ்டபாடம்.**

அவர்களிடம் மயங்கி உள்ளனர். அவர்கள் யாரும் மாகாணப்பிரச்னையைச் சரியென்று கருதுவதில்லை. எதிர்ப்பர். எனவே அவர்களின் ஆதிக்கம் பழுதுபடாதிருக்கும் இப்போது வேண்டாம் அந்தக்கிளர்ச்சி. கொஞ்சம் பொறுங்கள் என்று பேசினாரோ!

வங்கத்தார் இப்போது பீகார் மாகாணத்தாருடன் மோதிக் கொள்வார்கள்போலிருக்கிறது.

பீகாரிகள் வங்காளிகளை வெறுக்கிறார்கள் என்பதற்கான சில நிகழ்ச்சிகளே நடைபெற்றன சின்னாட்களுக்குமுன்பு.

சேராய்க்கேலா, கார்ஸ்வான், எனும் சமஸ்தானப் பிரதேசங்களை, தன்னுடன் இணைக்காவிட்டால், இந்திய யூனியனிலிருந்து, பிரிந்து தனி அரசு அமைத்துக் கொள்வதாக, ஒரிசா மாகாணம், சென்ற சில தினங்களுக்கு முன்பு, மத்திய சர்க்காரை மிரட்டி, தன் காரியத்தைச் சாதித்துக்கொண்டது. இப்போது நடைபெற்ற சம்பவம்!

அசாமியர் வங்கத்தின் கரம்தமது நலனைக் கெடுக்குமளவு வலுவடைவதைக்கண்டு ஆயாசப்படுகிறார்கள். அசாம் தலைவரொருவர் டில்லிசட்டசபையிலேயே பேசினார். 'மாற்றாந்தாயின் மகனைப்போல அசாமை நடத்துகிறீர்கள். அசாமுக்கு உரிமையும் நலனும் சரியானமுறையிலே இல்லை. இவ்விதம் அசாமை நடத்துவது கூடாது. இதுதான் முறை என்றால் ஏன் எங்கள்நாட்டை உங்கள் நாட்டுடன் ஒட்டவைத்துக் கொண்டிருக்கிறீர்கள் — அசாமை தனிநாடாக்கி விடுங்கள்' — என்றே கேட்டார்.

இவ்வளவும் இப்போது நடைபெறுகிற நிகழ்ச்சிகள். ஆச்சாரியார் கூறுவாரா இப்போது இந்தக் கிளர்ச்சி ஏன் கிளம்புகிறது என்பதற்கான காரணத்தை?

வங்கம் இரண்டாகிவிட்டது— எனவே சிறிய அளவும் சிதைந்தவளமும் கொண்டதாகிவிட்டது. எனவே வங்கமக்கள் தங்கள் நலனைப்பெருக்கும் மார்க்கம் என்ன என்று யோசிக்க வேண்டியதாயிற்று.

வங்கம் வளம்பெறவேண்டுமானால் இயற்கைச் செல்வத்தை விஞ்ஞான முறையுள்ள தொழிலுடன் சேர்த்துப் பயன்காணவேண்டும் என்ற எண்ணம் எழுகிறது. எழும்போது வேறுமாகாணங்களிலே இம்முறையில் வளம்பெருகி இருப்பது தெரிகிறது. அத்துடன் அந்த வேறு மாகாணத்தவரின் 'பொருள்கள்' தங்கள் கடைவீதிகளிலே குவிந்து கிடப்பதும் தெரிகிறது. எனவே நம் நாட்டுவளம் பெருகி நம்நாட்டுத் தொழில் வளர்ந்தால், நம் நாட்டு மக்கள் நலன்பெறுவர் என்ற எண்ணம் தோன்றுகிறது. தோன்றியதும் நமது நாட்டுக்குரிய எதனை நாம் யாரிடமாவது இழந்து விட்டிருக்கிறோமா என்ற ஆராய்ச்சி எழுகிறது.

அங்ஙனம் ஆராய்ந்தறிந்ததில், இன்று பீகார் மாகாணத்தோடு இணைந்துள்ள சில இடங்கள், மொழிவழி கவனிப்பினும் வரலாற்று வழி நோக்கினும் வங்கத்துடனேயே இணைக்கப்படவேண்டும் என்று உரிமை கொண்டாடி, பலபொதுக் கூட்டங்கள் நடத்தி, மந்திரிமார்களே இந்தக்கோரிக்கை நியாயமானது என்று கூறும்படி வங்கநாட்டுத் தலைவர்கள் நிலைமையை உண்டாக்கி விட்டனர். பீகாருடன் சேர்க்கப்பட்டுள்ள இந்த இடங்கள், இயற்கைச்செல்வம் நிரம்பியது - புதைபொருள் ஏராளமாம். எனவே இந்தப்பகுதி வங்கத்துடன் இணைக்கப்பட்டால், வங்கத்தின் வளம் வளரும் என்று கூறுகிறார்கள். பீகாரிகளுக்கு இதுபிடிக்கவில்லை! பிடிக்காதுதான்!!

இந்தமாதிரியான, கிளர்ச்சிகள் இப்போது கூடாது- என்கிறாரே, ஆச்சாரியார், அவரைக் கேட்கிறோம், விரோதம் முற்றி விஷப்பூண்டு நிரம்பியபிறகுதானா பரிகாரம் தேடுவது! ஏன், 'ஜாடை' தெரிந்து நடந்துகொள்ளக்கூடாது! ஏன், இந்தியபூபாகத்திலே, தனி அரசு அமைத்துக்கொள்ளும் தகுதியும் திறனும் உள்ள இடங்களைத் தனி அரசாக்கக்கூடாது? அதனால், மாச்சரியம் குறையும்! பிரிந்த பர்மாவுடனும் தனியாக உள்ள நேபாளத்துடனும் நேசமாக இல்லையா? அதுபோல இந்திய பூபாகத்திலே தனி அரசுகள் அமைந்து அவை ஒன்றோடொன்று நேசமாக ஏன் இருக்கமுடியாது! இதற்குச்சமாதானம்கூறக்காணோம், இப்போது வேண்டாம் என்று கூறுகிறார். ஏன்? என்ன பொருள் அதற்கு?

அவர் கூறுகிறபடி சகலரும் டில்லியை நோக்கித் தவங்கிடக்கிறார்கள் —சகல அதிகாரமும் அங்கு குவிந்துகிடக்கிறது. தனி அரசு செலுத்திய திராவிடர்கள், அரிசி சாப்பிடுவதா, சோளம் தின்பதா, என்பதுபற்றிச் சென்னை மந்திரிகூட அல்ல, டில்லியிலுள்ள மந்திரி வந்து கூறுகிறார்! இந்த நிலையைக் கண்டு இங்கு பூமிக்கடியில் தூங்கும் இயற்கைச்செல்வத்தை எண்ணி, இங்குள்ள மார்க்கட்டுகளில் வடநாட்டுப் பொருள் மலிந்து கிடப்பதைக் கண்டு, நாட்டின் ஜீவநாடி வடநாட்டாரிடம் இருப்பதைப்பார்த்து, இந்நாட்டுப் பெருமக்கள் வெளிநாட்டிலேகூலிகளாக வதைவதைஎண்ணி ஏக்கத்துடன் திராவிடர், திராவிட நாடு கேட்கின்றனர். இப்போது வேண்டாம் என்பதுதானா இப்படிப்பட்ட நியாயமான கோரிக்கைகளுக்குப்பதில்! அதோ மலேயாவில் ரப்பர் தோட்டத்திலே, காய்ச்சலால் இளைத்தவன் நடமாடி, பசிப்புலியை விரட்டப் பாடுபடுகிறானே, அவனிடம் சென்று கூறுவதா, "நண்பா! பொறுத்துக்கொள். நமக்கென்று ஒருநாடு உண்டே! அங்கு சகலவசதியும் உள்ளனவே! அங்கு தனி அரசு அமைத்தால் நமது நிலை உயருமே என்றெல்லாம், இப்போது யோசிக்காதே, கவலைப்படாதே, கிளர்ச்சி செய்யாதே, இப்போது ஒன்றேகால் கோடிரூபாய் செலவிட்டுக் கட்டிய மாளிகையிலே ஆச்சாரியார் கொலுவீற்றிருக்கப்போகிறார், ஆகவே இப்போது நீ, கூலியாகவே இரு; வறுமையிலேவாடு; பிறந்தநாட்டுக்கு வராதே; வெளிநாட்டிலே கூலிவேலை செய்!—என்று கூறுவதா! ஆச்சாரியாரைக்கேட்கிறோம் — அறிவுள்ளவர்களைக் கேட்கிறோம்— அநீதிக்கு இடம் தரலாகாது என்று கருதும் ஆண்மையாளர்களை எல்லாம் கேட்கிறோம், இப்போது கேட்கக் கூடாதா, திராவிடநாடு திராவிடருக்காகவேண்டுமென்று.!

—●—

# அவசரச் சட்டம், அகிம்சா திட்டமா!

தொடர் கதை

கற்பனைச் சித்திரம்



[30—5—48 தொடர்ச்சி]

அன்றைய கூட்டத்திலே நடந்த அமளியால், இளைய பூபதிக்கு, எலக்ஷன் விஷயமாகவும், கட்சிப்பிரதி கட்சியாகப் பிரிந்து இருப்பது பற்றியும் வெறுப்பே உண்டாயிற்று. கதர்க்கடை ஐயர், மிகக் கஷ்டப்பட்டு, அந்த வெறுப்பை மாற்றினார். அவருடைய சாமர்த்தியத்தினால், அந்த வெறுப்பே, ரோஷ உணர்ச்சியாக மாறிற்று. இந்தச் சில்லறைத் தகராறுகளைக் கவனிக்கவே கூடாது. ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்துக் குதிரை வாங்குகிறோம்-வண்டியில் பூட்டும்போது, குதிரை கொஞ்சம் முரட்டுத்தனம் செய்தால், அதனால் வெறுப்படைந்து, குதிரையே வேண்டாம் என்று கூறி விடுவதா! அரசியலில் இதுபோன்ற சங்கடம் சாதாரணம்—சமாளித்துத்தான் ஆகவேண்டும். நமக்காவது, எவ்வளவு தொல்லைகளும் சஞ்சலங்களும் ஏற்பட்டாலும் கடைசியிலே, ஜெயம் நிச்சயம்-ஏனென்றால், ஜெமீன்தாரர் எவ்வளவு பாடுபட்டாலும், நம்மைப் பற்றித் தப்புப் பிரசாரம் செய்து வைத்தாலும், நாம் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சிமீது ஒரு குறையும் கூறத் துணியமாட்டார்!” என்றார் கதர்க்கடை ஐயர். “காங்கிரஸ் கட்சி மீது குறை கூறவே முடியாதோ! போமய்யா போம்! நாம் அந்தக் கட்சியில் இருக்கிறோம் என்பதற்காக, அந்தக்கட்சி அப்பழுக்கற்றது என்று கூறி விடுவதா!” என்று இளைய பூபதி, கேட்டார். “நான் சொன்ன வார்த்தைகளைத் தாங்கள் சரியாகக் கவனிக்கவில்லை. காங்கிரஸ் கட்சியிலே குறையே கிடையாது என்று நான் கூறவில்லை. குறை கூறத் துணியமாட்டார் என்றுதான் சொன்னேன்! சூட்சமமாகக் கவனிக்கவேண்டும், என்பேச்சை! குறைகள் உண்டு.-ஆனால் கூறத்துணிவு கிடையாது! ஏனெனில், அந்தக் கட்சியின் கீர்த்தியை அவ்வளவு தூரம் பரப்பி விட்டார்கள். குறை கூறினால், ஜனங்கள் நம்பமாட்டார்களே, என்ற அச்சம் எவருக்கும் ஏற்படும். ஆகவேதான், காங்கிரசைக் குறை கூற அவருக்குத் துணிவு கிடையாது என்று சொன்னேன். தங்களுக்கு மட்டுமல்ல, எனக்கும் நன்றாகத் தெரியும், காங்கிரசிலே, பல குறைகள் உள்ளன. நேற்றுப் பேசினானே ஒரு சூனாமானா, அவனைப் போன்றவாளுக்குக் காங்கிரஸ் இடம் தரலாமோ! தந்துதானே இருக்கிறது! அப்படிப்பட்டவர்கள், மனதிலே, எண்ணிக்கொண்டிருக்கிற ராஜ்யம் இருக்கே அது நம் போன்றவாளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவே பிடிக்காது. ஜாதிகளே இருக்கப்படாது என்பது அவர்கள் திட்டம். இது நடைபெறக் கூடிய காரியமா, தேவையா? சாரதா சட்டம் என்று அனாவசியமாக, அக்ரமமாக ஒரு சட்டம் கொண்டுவந்து, அதைப் பிரமாதப் படுத்துகிறது, காங்கிரஸ் கட்சி. நமது தேசத்தின் கௌரவம் என்ன, எப்படிப்பட்ட சத்புருஷர்கள், ஆழ்வாராதி நாயன்மார்கள், அவதரித்த தேசம், அப்படிப்பட்டவர்கள் காலத்திலிருந்து நடைபெறுகிற, கலியாண காரியமாக, இவர்கள் ஒரு கட்டுத் திட்டம் செய்பலாமோ - செய்கிறார்கள்! இப்படி ஆயிரம் இருக்கு, அவர்கள் செய்கிற தவறுகள். இந்தத் தவறுகள் எல்லாம் எனக்கா தெரியாது! இந்தத் தவறுகள் எல்லாம் ஜனங்களின் காதிலே இப்போது ஏறாது. அவ்வளவு அதிகமாக, அதன் கீர்த்தி பரவி இருக்கிறது.”-என்று ஐயர் விளக்கமாகச் சொன்னார். இளைய பூபதிக்குத் திருப்தி ஏற்பட்டது. “அப்படிச் சொல்லுங்கள். பதினாலாம் தேதி கூட்டத்திலே, ஒரு பயல் பேசினானே, கவனித்தீரா?” என்று, வேறோர் விஷயத்தைக் கிளறினார் இளையபூபதி. “பதினாலாம் தேதியா! ஓ! ஆமாம்-ஆமாம்- ஜெமீன்தாரர் எனும் தசகண்டராவணனுடைய குடலைப்பிடுங்கி மாலையாகப் போட்டுக் கொண்டால்தான் பாரதமாதாவுக்குப் பரிபூரணத் திருப்தி ஏற்படும் என்று பேசினானே-அதைத் தானே...............” என்று ஆர்வத்துடன் பேசிய ஐயரை, இளையபூபதி தடுத்து, ‘அது அல்லய்யா! சுயராஜ்யம் என்றால் எப்படி இருக்கும் என்று வர்ணித்தானே ஒரு பய!” என்று நினைவைக் கிளறினார். ஐயர் புரிந்து கொள்ளவில்லை. “பாட்டுக்கூடப் பாடினானே, ஒருவனுக்குச் சோறு இல்லென்னா உலகத்தையே அழிச்சிவிடுவோம்னு” என்றார் இளையபூபதி. அப்போதும் புரியவில்லை. “பார்ப்பானைஐயனென்னுகூடச் சொல்லமாட்டோம என்று பாடினானே” என்று இளையபூபதி சொன்னார்-ஐயருக்குப் புரிந்தது - ஓ! அவனைச் சொலகிறீர்களா? ஆமாம்-பய, மண்டைக் கர்வி!” என்றார். அவன், சுயராஜ்யத்திலே பணக்காரர்களின் கொட்டமே அடக்கப்பட்டுவிடும்-எல்லோரும் ராஜா ஆகிவிடுவார்கள். என்று ஏதேதோ உளறினான்! இப்படிப்பட்ட ராஜ்யம் ஏற்படுவது நல்லதா?” என்று கேட்டார். ஏற்படவா போகிறது! சில பித்துக்குளிகளின் பேச்சு அது. ஆனால் ஒன்று; காங்கிரஸ் மகாசபை இப்படிப்பட்டவர்களுக்கு இடம் தரக்கூடாது. தவறுதான். குறைதான்.” என்றார் ஐயர். எனக்கு அவர்கள் பேச்சு வேடிக்கையாக இருந்தது. இளைய பூபதி காங்கிரஸ் கட்சியின் தயவைத் தேடுகிறார்- ஆனால் அந்தக் கட்சியினால் நாட்டுக்குச் சிலர் சில நன்மையான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று எண்ணினால் கோபிக்கிறார், வெறுப்படைகிறார் கேவலமாகப் பேசுகிறார். பணக்காரரின் ஆட்சியாக இராது சுயராஜ்யம் என்றால் இளையபூபதி பதைக்கிறார்; பழைய ஜாதிமத பேதங்கள் ஒழிந்து எல்லோரும் ஒன்று என்ற எண்ணம் வளர்ந்து புதிய முறை ஏற்படும் என்று சொன்னால் கதர்க்

கடை ஐயர் கோபிக்கிறார்-ஆனால் எங்கள் ஊரிலே காங்கிரசுக்கு முக்கிய புருஷர்களே அந்த இருவர்தான்! காங்கிரசிடம் அன்புகொண்ட மக்கள் எங்கே இந்தச் சூட்சமத்தைத் தெரிந்து கொள்கிறார்களோ என்று கூட நான் பயப்பட்டேன். ஆனால் ஜனங்களால் இளையபூபதியை அறிந்துகொள்ளமுடியவில்லை. எலக்ஷனில் அவர் பிரமாதமான வெற்றி பெற்றார்! ஊரெங்கும் திருவிழா போலக் கொண்டாடினார்கள். தெருக்களிலே தோரணங்கள்! கோயில்களிலே அபிஷேகம்! ஒரு பெரிய பொதுக் கூட்டம். அதிலே பலபேர் இளையபூபதியைப் பாராட்டிப் பேசினார்கள். வீட்டிலே சிறந்த முறையிலே விருந்து! கதர்க்கடை ஐயருக்குச் சன்மானம். ரங்கன்எலக்ஷன் ஜெயித்தால் தனக்குத் தங்கத் தோடா செய்து போடவேண்டும் என்று சொல்லியிருந்தான். தங்கத் தோடா செய்தார்கள்; ஆனால் அதைப் போட்டுக்கொள்ள முடியவில்லை. எலக்ஷனன்று நடந்த அடிதடியில் அவன் கையில் பலத்த காயம்-கட்டுக் கட்டிக் கொண்டிருந்தான். தோடா பிறகு, இப்போது இரண்டுநாட்களுக்குத் தென்னந் தோப்பிலேயே வாசம் செய்ய வேண்டும் என்று ரங்கன் சொன்னான். இளைய பூபதி அதற்கான ஏற்பாடு செய்தார். தோற்ற ஜெமீன்தாரர் ஊரில் இருந்தால் கேவலம் என்று எண்ணிப்பழனிக்குப்போய்விட்டார்! எங்கள் குடும்பத்தைக் கெடுத்தார் பணத்தின் பலத்தால்! அவருடைய பணபலத்தை எதிர்த்து அடிக்கக் கூடிய பணபலம் என்னிடம் இருந்தது-அவர் பழனி சென்றார். ரங்கா! அவர் பழனிக்குப் போய் பஞ்சாமிர்தம் சாப்பிடுவார்-அதுவும் அவருக்குக் கசப்பாகத்தான் இருக்கும். நமக்கோ, பழனிக்குப் போகாமலேயே பஞ்சாமிர்தம் கிடைத்து விட்டது! என்று கூறி மகிழ்ந்தேன். எங்கள் மகிழ்ச்சி வேகத்தில் நான் அக்காவைப்பற்றியோ அவளைத் தேடிக்கொண்டு வெளியேறிய அம்மாவைப்பற்றியோ எண்ணிப்பார்க்கவும் இல்லை. ஒரே சந்தோஷ ஆரவாரம். பல தலைவர்களிடமிருந்து வாழ்த்துத் தந்திகள் வந்தவண்ணம் இருந்தன! பத்திரிகைகளிலே இளையபூபதியின் போட்டோ வெளிவந்தது. இளையபூபதியின் இணையில்லாவெற்றி என்று ஒரு காலணாப் பாட்டுப்புத்தகம் வெளி வந்தது.

சில தினங்களுக்குப் பிறகு, ஐயர், கொஞ்சம் தாழ்ந்த குரலிலே, "இந்த எலக்ஷனில் ஜெயித்தது ஒரு பிரமாதமானதல்ல. உங்களுடைய கௌரவத்துக்கும் செல்வாக்குக்கும் குணத்துக்கும், இது ஒரு அல்ப காரியம். நீங்கள், மந்திரியாக வேண்டும்—அது உண்மையான மகிழ்ச்சியாக இருக்கும்" என்று கூறினார். "உனக்கு இருக்கும் ஆசையிலே நீ என்னை, மந்திரியாகமட்டுமா, ராஜாவாகக் கூடச் செய்துவிடுவாய்! ஆனால் உன்னிடமா இருக்கிறது அதற்கான மந்திரசக்தி!" என்று இளையபூபதி கேலி செய்தார். ஐயர் சிரிக்கவில்லை. "உம்முடைய ஜாதக பலனை பாரதப் பிரசங்கி பார்த்தசாரதி ஐயங்காரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டேன். அவர் வாக்கு எப்போதும் பழுதாவதில்லை. அவர்தான் எனக்குச் சொன்னார் உமக்கு நிச்சயமாக ஒரு மந்திரி வேலை கிடைக்கும் என்று; அதனாலேதான் நான் அதற்கான காரியத்தைத் தொடங்கிவிட்டேன்" என்று கூறினார். "காரியமா? என்ன காரியம்?" என்று கேட்டார் இளையபூபதி. ஐயர் "இந்த எலக்ஷனிலே உமக்குக் கிடைத்த ஜெயத்தாலே ஜில்லா முழுவதும் உமது பெயர் பிரபல்யமாகிவிட்டது; மாகாணக் காங்கிரசிலே உமக்குச் செல்வாக்கு இனி ஏற்படவேண்டும்; அப்போதுதான் மந்திரி வேலை நிச்சயம்; அதற்காக நாம் வடக்கே போய்வரவேண்டும்" என்றார். இளையபூபதி சிரித்துக் கொண்டே "என்ன ஐயர்! எலக்ஷனிலே பட்ட சிரமத்தாலே மூளை குழம்பிவிட்டதோ! மாகாணத்திலே செல்வாக்குப் பெற மாகாணத்தை விட்டு விட்டு வடக்கே போகவேண்டும் என்று கூறுகிறீரே, இது என்னய்யா விந்தை" என்று கேட்டார். "விந்தையுமல்ல வேடிக்கையுமல்ல; உமக்குத் தெரியாத சூட்சமம். காங்கிரசின் ஜீவநாடி, சூத்திரக்கயிறு எங்கே இருக்கிறது தெரியுமோ?" என்று கேட்டார். அன்று ஒரு நாள் ஒரு பிரசங்கி காங்கிரசின் ஜீவநாடி கைராட்டையிலே இருக்கிறது என்று சொன்னானே" என்று கூறினார் இளையபூபதி. "அது ஜனங்களுக்காகச் செய்யப்பட்ட பிரசங்கமல்லவா? அதைத் தள்ளுங்கள். காங்கிரசின் சூத்திரக்கயிறு வடக்கேதான் இருக்கிறது—பம்பாய்—வர்தா—சபர்மதி—கல்கத்தா — டில்லி— இப்படிப்பட்ட இடங்களிலே. நாம் அங்கு சென்று செல்வாக்கைத் தேடிககொண்டால் போதும் இங்குள்ள மாகாண காங்கிரஸ் நமது மடிமீது தவழும் குழந்தையாகி விடும்" என்றார்.

(தொடரும்)

## இஸ்லாமா? இஸ்ரேலா?

7-ம் பக்கத் தொடர்ச்சி

என்ன தொழிலைச் செய்துகொண்டிருந்தாலும், செல்வத்தில் புரண்டாலும் வறுமையில் வாடினாலும், அவர்களின் வாழ்க்கையின் குறிக்கோளாக, ஜெருசலத்தைத் திரும்பப் பெறுவது—பலஸ்தீனை, யூத ராஜ்யமாக்குவது, இஸ்ரேல்அரசு அமைப்பது, என்பதுதான்.

யூதர்களின், வட்டித்தொழில், அவர்களைப் பிறர் வெறுக்கும்படி செய்தது பலநாடுகளில், யூதர்களை, விரட்டவும் விலக்கவும் சட்டங்கள் இயற்றப்பட்டன. பல நகர்களில், யூதர்கள் வசிக்கும் பகுதிகள், தனிப் பெயரிடப்பட்டு, இழிவிடமாகக் கருதப்பட்டது. உலகத்திலே, பலநாடுகளிலே இவ்வித வெறுப்புணர்ச்சி கிளம்பித்தாக்கியகாலத்திலும், யூதர்கள் தங்கள் மனதிலே, இஸ்ரேல் அரசை அமைத்துக்கொண்டு வந்தனர். பலஸ்தீன், தங்களுடையது—எகிப்துப் போரசின் ஒரு பகுதி, என்ற எண்ணம், அரபுக்களுக்கு அசைக்கமுடியாதபடி ஏற்பட்டு விட்டது. யூதர்களின் மனோராஜ்ஜியத்தைப்பற்றி, அரபுக்கள், பெரும்பாலானவர்கள் கேலியாகவே பேசினர்—யூகமுள்ளசிலர் மட்டும், இது ஓர் எதிர்கால ஆபத்து என்று எடுத்துரைத்தனர்.

அடிக்கடி பலஸ்தீனில், யூத—அராபிய சச்சரவுகள் நடைபெறலாயின.

மெள்ளமெள்ள யூதர்கள், பலஸ்தீன் எமது பூர்வீகநாடு! எமக்கே அது சொந்தமாகவேண்டும்! எமது ஆட்சியே அங்கு இருக்கவேண்டும் என்று பேசவும், கிளர்ச்சி செய்யவுமாயினர். இது, நாளாவட்டத்தில் ஒரு இயக்கமாகவே உருவமெடுத்தது—ஜியானிஸ்ட் இயக்கம் என்பது, அதன் பெயர்.

இதை, வெளிப்படையாகத் தூண்டிவிடும் முறையிலேயே, பிரிட்டிஷார் நடந்துகொண்டனர்.

ஜெருசலத்தைப் பிடித்தபிறகு,

1917-ல் பிரிட்டிஷ் சர்க்காரின் சார்பில், பால்பர் பேசுகையில், பலஸ்தீனில், யூதர்களைக் குடியேறச் செய்து, அந்த நாட்டை, யூதர்களின் தாயகமாக்குவது, பிரிட்டிஷ் நோக்கம் என்று கூறினர். ஜியானிஸ்டு இயக்கம் இதன்பயனுய், புதிய நம்பிக்கையும் எழுச்சியும் பெற்றது. சர்வதேச சங்கத்தார், ஜெர்மன் சண்டை முடிந்தபிறகு, பலஸ்தீனை, ஒரு ஒழுங்கு முறை ஏற்படும்வரை ஆட்சிசெய்து வரும்படி, பிரிட்டனுக்கு அதிகாரம் அளித்தது. பிரிட்டிஷார் அந்த அதிகாரத்தைத் தவருன காரியத்துக்குப்பயன் படுத்தினர் — பலஸ்தீனை யூதரின் தாயகமாக்குவோம் என்று கூறிய தன் மூலம். 1918-ல், யூதர்களுக்கு, ஜெருசலத்தில் ஒரு கல்லூரி ஏற்படுத்தினர். உலகின் பல பகுதிகளில் இருந்துவந்த யூதர்கள், அந்தந்த நாடுகளில், தங்களுக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, யூதராஜ்யத்தின், அவசியத்தை வலியுறுத்தினர்.

ஹிட்லரின் யூத ஒழிப்புத் திட்டத்தினுல், உலக நற்குணவான்களின் அன்பும் ஆதரவும் யூதர்பக்கம் திரும்பிற்று. ஒருபெரிய இனம்— பலப்பலநூற்றூண்டுகளாகப்பலவகையான கொடுமைகளைத் தாங்கிவரும் கூட்டம்—அதற்கென ஓர் தனிநாடு இல்லாமல் தவிப்பது கூடாது— ஆகவே, பலஸ்தீனை, யூதர்களின் தாயகமாக்கத்தான் வேண்டும், என்ற பிரசாரம் பலப்பட்டது.

இன்று, நெடுங்காலமாக இருந்து வந்த யூதர்களின் மனோராஜ்யம், நிஜமாகவே உருவெடுத்து இஸ்ரேல் ராஜ்யம் என்று அமைக்கப்பட்டு விட்டது. அமெரிக்காவும் ரஷியாவும் அதனை அங்கீகரித்து விட்டன.

சிலுவையா? பிறையா? என்ற பிரச்னை மாறி, இன்று, அங்கு இஸ்லாமிய ராஜ்யமா? இஸ்ரேல் ராஜ்யமா? என்பது பிரச்னையாகி விட்டது.

ஜெருசலம் இப்போது யூதர்களிடம் இருக்கிறது. அதன் மீது, எகிப்துகாட்டு விமானங்கள் வட்டமிடுகின்றன. இந்தச்சண்டை, உலகப் பெரும்போராக வளர்ந்து விடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டுமே, என்ற கவலை, பல வட்டாரங்களிலே, ஏற்பட்டு விட்டது. பலஸ்தீனில் போர்! மூன்றுநூற்றூண்டுகள், ஐரோப்பிய நாட்டவர் இரத்தம் கொட்டிக்கொட்டிப் பெறமுடியாமல் போய்விட்ட, ஜெருசலம், இனி யாருக்குச் சொந்தம், யூதருக்கா? அராபியருக்கா? என்பதைத் தீர்மானிக்கப் போர் மூண்டு விட்டது. சமாதான தூதரின் சமாதி உள்ள புனித புரியிலே, சமர்! உலகின்நானுபாகங்களிலும், “நாடோடிகள்”; போல் சுற்றித்திரிந்தயூதர்கள், இஸ்ரேல் ராஜ்யம் அமைத்து விட்டோம் என்று பெருமையுடன் கூறிக்கொண்டுள்ளனர். டிரான்ஸ்ஜோர்டன், ஈராக், சிரியா, லெபனுன், எகிப்து ஆகியநாட்டுப் படைகள் யூதஅரசை எதிர்க்கின்றன. இந்தப் போரைத்தடுக்க, வல்லரசுகளும், ராஜதந்திரிகளும், ஐக்ய நாடுகள் சபையும், பலவேறு திட்டங்களைக் கொடுத்தனர்—பலன் ஏற்படவில்லை. பலஸ்தீன யூதர் பகுதி—அரபு பகுதி என்று பிரித்து விடலாமே, என்று 1936-ல் பிரிட்டிஷார் ஒரு திட்டம் கூறினர்—ஏற்றுக்கொள்ள வில்லை எவரும்! எனவே போர். இந்தப்போர், உலகப்போராக மூண்டு விடக்கூடாதே என்பதற்காக, மீண்டும் ஏதேனும் சமரசமுயற்சிசெய்து பார்க்கலாம் என்று, நாலுவார காலத்துக்குச் சண்டையை நிறுத்தி வைக்கும்படி, இருதரப்பினரையும், ஐக்யநாடுகள் சபை கேட்டுக்கொண்டது. இணங்கினர். ஆனல் போர்க் கோலம் கலையவில்லை. பலஸ்தீன் இதுவரையில் வாங்கிய பலி போதாதென்று, மீண்டும் ‘பலி’ கேட்கிறது! மீண்டும் இரத்த அபிஷேகம் நடக்கிறது, பலஸ்தீனில்! ஆனல் அங்கு இருப்பதோ, உலகில் சமாதானத்தை நிலைநாட்டவந்த உத்தமர் ஏசுவின் சிலுவை!!

## பாஜிராவ்

16-ம் பக்கத் தொடர்ச்சி

ஷா:- பாஜிராவ்! என்ன இது? எப்போது பார்த்தாலும், ராஜ காரியம், ராஜகாரியமென்று ஒரே ரகளையாக இருக்கிறது. இதோபார், பாஜி, என்னல் இதுபோல் இருக்கமுடியாது. ஒரு நிமிஷம்கூட நிம்மதி இல்லை.

பாஜி:- ஆமாம், மகாராஜ், நிம்மதியிருக்கத்தான் செய்யாது. ராஜரீகம் அப்படித்தான்.

ஷா:- பாஜி! இதற்கு ஏதாவது ஒரு வழிசொல், என்னுலே முடியாது இந்த இம்சையைச் சகித்துக் கொள்ள.

பாஜி:- மகராஜ்! தங்களுக்குச் சேவை செய்யவே, நான் ஜெனனம் எடுத்திருக்கிறேன். தாங்கள் ராஜ போகத்துடன் சகலசுகத்துடன், வாழவேண்டும், அதைக்கண்டு நான் ஆனந்திக்க வேண்டும். வேறென்ன வேண்டும் எனக்கு.

ஷா:- என் க்ஷேமத்திலே இவ்வளவு அக்கரை கொண்ட நீ இருந்துமா, இந்தத்தடியர்கள், சதாசர்வ காலமும் எனக்குத் தொல்லைகொடுத்துக் கொண்டிருப்பது? அந்தக்காரியத்தை எல்லாம் நீ கவனித்துக் கொள்ளக்கூடாதோ?

பா:- மகாராஜ்’ நான் சித்தமாகத் தான் இருக்கிறேன். ஆனல் மகா ஜனங்கள், மகாராஜாவிடம் சொல்லியே சகலகாரியமும் செய்து கொள்ள வேண்டுமென்று கூறும் போது, நான் எப்படித்தடுக்க முடியும்?

ஷா:- ஏன்? தடுத்தால் என்ன?

பா:- எப்படி மகாராஜ், அது சாத்தியமாகும்? தங்கள் உத்தரவு இருந்தால் தானே!

ஷா:- என்ன உத்தரவு தேவை?

பா:- சகலராஜகாரியங்களும் இனி பாஜிராவே கவனித்துக் கொள்ள வேண்டும் என்று ஒரு உத்தரவு பிறப்பித்து விடுங்கள், மகாராஜ்; பிறகு ஒரு ஆள்கூட உமக்குத் தொல்லை தரமாட்டான். எல்லாம் நான் கவனித்துக் கொள்கிறேன்.

ஷா:- சரி! பாஜிராவ்! இன்று முதல் மராட்டிய சாம்ராஜ்ய காரியாதிகாரத்தை உன்னிடம் ஒப்படைக்கிறேன். கொண்டுவா, முத்திரை மோதிரத்தை.

(பத்திரத்தில் முத்திரை பொறித்து பாஜியிடம் தருகிருன்,)

மூர்த்தி கணக்கிட்டுப் பார்த்தார்—அதுவும் சரியாகத்தான் இருந்தது.

“குருமூர்த்தி, மிகவும் திறமைசாலி. ரங்கதுரை பாகவதர் என்று ஒருவனை ராஜபார்ட்டுக்குத் தயார் செய்தார், எவ்வளவு அருமையாக இருந்தது தெரியுமா? என்னமோ பேதப்பட்டு ரங்கதுரை பாகவதர் விலகி விட்டார். கம்பெனிக்குக் கொஞ்சம் நஷ்டந்தான் — ஆனால் பார்த்துக் கொண்டேயிருக்கிறார் நல்ல ஆளாகவும் சமயமாகவும் கிடைக்கட்டுமென்று; கிடைத்தால் மற்றோர் ரங்கனைப்பாகவதராக்குவார், - அவரால் முடியும்” என்று பேசினர், நாடகம் பார்த்தோர். உண்மையிலே, அவரால், முடியும், ரங்கதுரைகளைப் பாகவதராக்க!

தன்னை ஏன் பாகவதராக்கவில்லை என்ற வருத்தம், சோமுவுக்கும் தாமுவுக்கும் உண்டு.

ஆனால் குருமூர்த்தி என்ன செய்வார்! மோரிலிருந்துதான் வெண்ணெய் எடுக்க முடியுமே தவிர, பன்னீரிலிருந்துகூட எப்படி எடுக்க முடியும்! அதுபோலத்தான்! ரங்கன் கிடைத்தால் பாகவதராக்க முடியும்—சோமுவை அப்படி ஆக்கமுடியாதே! அது அவருக்குத் தெரியும்—சோமுவுக்குத் தெரியாது.

ரங்கதுரை பாகவதர்-பழையபடி—சாதாரண ரங்கன் ஆனான். முன்பு பலபேர், அவனைக் கேட்டதுண்டு, “ஏண்டாப்பா ரங்கா! இவ்வளவு நல்ல சாரீரம் இருக்கும்போது, ஏன் இப்படி மங்கிக் கிடக்கிறாய்—ஏதாவது கம்பெனியில் சேர்ந்தால், பிரமாதமான பேர் வருமே” என்று, அதேபோல மீண்டும் கேட்கலாயினர், “ரங்கு! ஏன் இப்படி உன் திறமை பாழாகும்படி விட்டுவைக்கிறாய். ராஜபார்ட்டாக இருந்தாய், இப்போது, வெற்றிலை பாக்குக் கடை வைத்துக்கொண்டாயே. நீ தோடி பாடினால், கவலை ஓடிப் போகுமே! காவடிச் சிந்து நீ பாடும் போது, வைஷ்ணவன்கூட சைவனாகிவிடலாமா என்று எண்ணுவானே! இவ்வளவு திறமையையும் பாழாக்கிக்கொண்டு, சிசர் வேண்டுமா, வில்ஸ் வேண்டுமா, அசோகா பாக்குத்தூளா, சுகந்தா தூளா என்று கேட்டுக்கொண்டு, வெற்றிலைக் கடையிலே இருக்கிறாயே. இது சரியா?” என்று கேட்கலாயினர்.

“அது சரிங்க, விஷயம் பெரிது. விளக்கமாகக் கூற, நேரமில்லைங்க, உங்களுக்கு, சோடா, ஐஸ் போட்டு தரட்டுங்களா, வெறும் சோடாவே போதுமா?” என்று கேட்டுக் கொண்டே, கடையிலே, உட்கார்ந்துகொண்டிருந்தான், ரங்கன்.

வெற்றிலை பாக்குக் கடையிலே, முருகன் வேஷத்திலே எடுத்த போட்டோ, தொங்கிக்கொண்டிருந்தது. கம்பெனியில் ரங்கதுரை பாகவதரின் படம் இல்லை. சோமு, அந்தக் காலி இடத்தில் எந்தப் படம் புகுமோ என்று எண்ணிக் கொண்டிருந்தான். விநாயகர், படத்தைத் தொங்கவிட்டார் மானேஜர்.

கம்பெனிக்கும் நஷ்டமில்லை—குருமூர்த்தியார் கணக்குப்படி.

ரங்கனுக்கும் நஷ்டமில்லை—அவனுடைய நோக்கத்தின்படி.

இடையிலிருந்தோர், ரங்க பாகவதரை, வெற்றிலைக் கடை வைக்கச் செய்துவிட்டோம் என்று பூரித்தனர்.

ரங்கனோ, வெற்றிலைக்கடையை நடத்தினால், அதனாலே என்ன? நான் கம்பெனியில் உழைத்தேன், அதனால் அங்கு உயர்ந்தேன், கம்பெனி முதலாளியிடம் மரியாதையும் அன்பும் காட்டினேன், அதனால் அவர் என்னை ஆதரித்தார்—பாராட்டினார். இப்போது, அதே முறையில் நடந்துகொள்கிறேன் இங்கு—அதனால், கடைவீதியில், நாலு பேர், என்னை நல்லவன் என்றுதான் சொல்லுகிறார்கள்; இங்கு இருக்க வேண்டிய முறைப்படி, வெற்றிலை வாடாதபடி பார்த்துக் கொள்கிறேன், பாக்குக்கெடாதபடி பார்த்துக்கொள்கிறேன், சோடா கேட்டால், ஐஸ் கலந்து தரட்டுமா என்று கேட்கிறேன்—கடையைக் கண்ணுங் கருத்துமாய்க் கவனித்துக் கொள்கிறேன் – இதிலே புதிய சிரமமோ, கவலையோ காணோம்! பாகவதராக இருந்தாலும் இல்லாவிட்டாலும், கடைநடத்தினாலும் நாடகமாடினாலும், எந்தக் காரியத்தைச் செய்தாலும், நல்லவனுக்கு, திறமைசாலிக்கு, உண்மை உழைப்பாளிக்கு, அவன் எந்தவேலையைச் செய்தாலும், அதிலே அவன் ஒரு குறிப்பிடத் தக்கவனாவான்-இது இயற்கை நீதி! இதை, பொறாமை பொச்சரிப்பு, கலகம், எதுவும் மாற்றாது! நாடகக் கம்பெனியில், ராஜபார்ட்டாக இருந்தேன், இப்போது கடைவீதியில், என்னை வெற்றிலைபாக்குக் கடைக்காரர் சங்கத்துக்குக் காரியதரிசியாக்கித்தான் இருக்கிறார்கள்” என்றான்.

அவன்நிலை மாறியிருந்தது-அதை அவன் நிம்மதி என்றான்

அவன்நிலை மாறியிருந்தது கண்டு, நிந்திப்பவர்கள், பார்! ஆசாமி என்ன கதியானான்! வெற்றிலைக் கடை வைத்திருக்கிறானையா, ராஜ பார்ட்!!-என்று ஏளனம் செய்தனர்.

ஆனால் ஒருவராவது, ரங்கன் ராஜபார்ட் நிலையை இழந்ததும், குருமூர்த்தி கம்பெனி ரங்கனை இழந்ததும், அந்த இருவருக்கும் நஷ்டம், அல்ல என்ற போதிலும், நாடகக் கலைக்கு ஒருநஷ்டம், அதை ஈடு கட்டவும் முடியவில்லை, என்பதைப் பற்றி எண்ணிப்பார்க்கவே இல்லை. கலைநுட்பம் உணர்ந்த மிக மிகச் சிறிய தொகையினருக்கு மட்டுந்தான், இந்த நஷ்டம் தெரிந்தது. அவர்கள் ரங்கனைப்பார்க்கும்போது, அதிகம் பேசவில்லை! ரங்கனும் அவர்களிடம் எதுவும் வாதாடுவதில்லை. அவர்கள், குருமூர்த்தியிடமும் எதுவும் பேசவில்லை.

குருமூர்த்தி—ரங்கதுரை கூட்டுறவு, கம்பெனிக்கு இலாபமா நஷ்டமா, என்பதல்ல முக்கியமான பிரச்னை, கலைத்துறைக்கு, அவ்விதமான, கூட்டுறவு நிச்சயம் தேவையாயிற்றே, அது, எக்காரணத்தாலோ கெட்டுவிட்டதே, அதனால் கலைத்துறைக்கு நஷ்டந்தானே, என்பதை அந்தச் சிறு தொகையினர் மட்டும், உணர்ந்து உருகினர், ஆனால் அவர்கள் சிறுதொகை! என்றைக்கேனும் ஒருநாள் சுரஸ்தானம் தவறி யாராவது நடிகன் பாடும் போது, குருமூர்த்தியின் கண்களிலே நீர் ததும்பும். “குருமூர்த்தி கம்பெனிக்கு நேற்று போயிருந்தேனப்பா, இப்போது நீ இல்லாததால் சோபிக்கவே இல்லை நாடகம்” என்று என்றேனும் யாரேனும் கூறும்போது, ரங்கதுரையின் கண்களில் நீர் ததும்பும். அவர்களின் கூட்டுறவின் கடைசிப்பலன், அந்தக் கண்ணீர்த் துளிகள் தான் போலும்!

சரித்திரச் சித்திரம்.

# பாஜிராவ்

அரசியல் அதிகாரம் பெற்றுவிட்டால் போதும், ஆரியரின் ஆதிக்கத்தை அகற்றிவிடமுடியும் என்று கருதுபவர் சிலருண்டு. மத, சமுதாயத் துறைகளிலே, பார்ப்பனருக்கு, ஆதிக்கம் இருக்குமட்டும், வெறும் அரசியல் அதிகாரத்தைக் கொண்டு, இனத்தை, மானத்தோடு வாழச் செய்ய முடியாது. அதுமட்டுமா? ஆரியரின் பிடி, மதசமுதாயத் துறைகளில் பலமாக இருக்கும்போது, ஆட்சித்துறை, நமது இனத்தவரிடம் இருந்து பயனில்லை என்பது மட்டுமல்ல, அந்த ஆட்சியை ஆரியர்களால், கெடுக்கவும், கவிழ்க்கவும், மயக்கவும், மாற்றி அமைக்கவும்சுலபத்திலே முடிகிறது. இதனை விளக்கும், சரித்திரச் சித்திரங்கள் பலப் பல.

சிவாஜி, மராட்டிய சாம்ராஜ்யத்தைச் சிருஷ்டித்தார்—வீர வெற்றிகள் பல பெற்றார். சாத்பூராமலைச் சாரலின் சிறப்பை இந்திய பூபாகம் பூராவும்பாராட்டிற்று. ஆனால், மராட்டிய சாம்ராஜ்யம், மங்கி மறைந்தது இரண்டே தலைமுறையில். மாவீரன் சிவாஜிக்குப் பிறகு அவர் மைந்தன் பட்டத்துக்கு வந்தார் — முடி அவரிடம் இருந்தது, பிடியோ கலூஷா எனும் பார்ப்பனனிடம்!

பிறகு, ஆளவந்தார், ஷாகு. சிவாஜியின் பேரன்!

பாஜிராவ் எனும் பார்ப்பனர் ஷாகுவின் நேசத்தைப் பெற்று, மெள்ள, மெள்ளச்சகல அதிகாரங்களையும்கைப்பற்றி ஷாகுவிடமிருந்தே, அதிகார பூர்வமான அனுமதியும் பெற்றான் சகல ராஜ்யாதிகாரியத்தையும் கவனித்துக்கொள்ள. அந்த நாட்களின் காட்சி ஒன்று இங்கு சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

இடம்:— ஷாகு, அரண்மனை.

பாத்:- ஷாகு; வேலையாள், ஊர்ப் பிரமுகர்கள்; பாஜிராவ்.

வேலை:-மகாராஜ்! சமூகத்தை நாடிச் சிலர் வந்திருக்கிறார்கள்.

ஷா:-வேறே எதற்கு அவர்கள் இருக்கிறார்கள். சனியன்கள், வரச் சொல்!

(வேலையாள் போய்ச் சிலரை அழைத்து வருகிறான். வந்தவர்கள் கைகட்டிக் கொண்டு நிற்கிறார்கள்)

ஷாகு:- யார் நீங்களெல்லாம், என்ன காரியமாக வந்தீர்கள்.

வந்தவர்:-மகாராஜாவைப்பார்க்க!

ஷாகு:-(கோபமாக எழுந்து வருகிறான்)

(அவர்கள் எதிரே நின்று)

"பார்த்துவிடு. பார்த்தாயா! பார்த்தாயா! போ!"

(மீண்டும் ஆசனத்திலே உட்காருகிறான்.)

வந்:-மகாராஜாவுக்குத் தொல்லை தர நேரிடுவதைப் பற்றி வருந்துகிறேன். இருந்தாலும், சொல்லவேண்டியதைச் சொல்லாமல் இருப்பதற்கு இல்லை.

ஷாகு:- ஏனய்யா அழுகிறீர்! சொல்லித் தொலைக்கவேண்டியதைச் சொல்லிவிட்டுப் போ.

வந்:- ஜாகீர்தார்கள், ராஜாங்கத்திலே கேட்கும் வரிப்பணம் அதிகமென்று குறை கூறுகிறார்கள்.

ஷாகு:- பாஜிராவ் என்ன சொன்னார்?

வ:- அவர் என்ன சொல்கிறார், கட்ட வேண்டியதுதான் என்று கூறுகிறார்.

ஷா:- அவ்வளவுதானே! பாஜிராவ் சொன்னபிறகு வேறே பேச்சு என்ன?

(வேறொருவனைப் பார்த்து)

ஷா:-நீ யார்? என்ன தேவை? சீக்கிரம்.

வந்:- மகாராஜா............

ஷா:-சொல்லு ராஜா, சீக்கிரம். சீக்கிரம் சொல்.

2 வ:- குதிரைப் படைகளுக்கு....

........

ஷா:- குதிரை இல்லையா? குதிரைக்குக் கொள் இல்லையா, என்ன இல்லை! போய்ச் சொல் பாஜிராவிடம். எதற்கும் இங்கே வந்து தொலைக்கிறார்கள்.

(வேறு ஒருவனைப் பார்த்து)

ஷா:- உன் விஷயம் என்ன? வரியா?

3 வந்:- இல்லை! மகாராஜா........

ஷா:- மாளிகை விஷயமா?

3 வந்:- இல்லை, சத்ரபதி!

ஷா:- வேறே என்ன, சொல்லி விட்டுப் போ—

3 வந்:- மகாராஜ்! நமது மண்டலத்திலே மக்கள், மிக்க அதிருப்தி கொண்டுள்ளனர். பார்ப்பன ராஜ்யமாகிவிட்டதே என்று பதைக்கிறார்கள்.

ஷா:- பார்ப்பன ராஜ்யமாகிவிட்டால், என்ன கேடாம்!

3 வந்:- மானம் போகிறது, மகாராஜ்! செல்வம் சீரழிகிறது! வீரம் ஒழிகிறது! சிவாஜியின் வம்சம் நசித்துவிடுமோ என்று பயப்படுகிறார்கள். பார்ப்பனர்கள் பழைய சாஸ்திரங்களைக்கூட மாற்றியும் திருத்தியும், தமக்குச் சாதகமாக எழுதிவிடுகிறார்களாம்! மகாராஷ்டிர தர்மம் ஒழிந்துவிட்டது! சனாதன தர்மம் தலைவிரித்து ஆடுகிறது என்று குறை கூறுகிறார்கள்.

ஷா:- குறை கூறிக் கூறிப் பழக்கப்பட்ட கும்பலின் பேச்சைக்கேட்டுக் கேட்டுக் காது குடைகிறது! சரி! எல்லாவற்றையும் பாஜிராவிடம் போய்ச்சொல்.

3-வந்:- இந்த மண்டலம் பார்ப்பன ராஜ்யமாகி வருகிறது என்பதையா சொல்ல.

ஷா:- ஆமாம், போய்ச்சொல்!

3-வந்:- பாஜிராவிடமா? அவரே பார்ப்பனராயிற்றே!

"ஷா:- (வேலையாளை நோக்கி) ஏ! எங்கே நம்மராஜா!"

(வந்தவர்களை)

சரி! போகலாம்! வந்தாயிற்று, பார்த்தாயிற்று, பேசியுமாயிற்று, இன்னும் என்ன? போங்கள்! வேறு வேலை இருக்கிறது.

(போகிறார்கள்.)

(வேலையாள் உள்ளேபோகிறான்)

(பாஜிராவ் வருகிறார்)

(அவரைக் கண்டதும்)

(12-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi Street, Conjeeveram.